துணை வேந்தர்களை அழைத்து

தமிழ்நாட்டில் ஆளுநர் அரசியல் செய்வதா?

உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

விழுப்புரம். ஜூன் 8 -

“ துணை வேந்தர்களை அழைத்து தமிழ்நாட்டில் ஆளுநர் அரசியல் செய்வதா? என்று உயர் கல்வித் துறை அமைச்சர் கபொன் முடி அளித்த பேட்டியில் கண்டனம் தெரிவித் துள்ளார்.

விழுப்புரத்தில் அமைச்சர் க. பொன்முடி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே கூறியது போல எனது ஒரு கண் சுகாதாரம் மற்றொரு கண் கல்வி என்ற கருத்திற்கு ஏற்றார் போல் இந்த இரண்டு ஆண்டுகளில் அவர் ஆரம்ப கல்விக்கென இல்லம் தேடி கல்வியை உருவாக்கி கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஆசிரியர்களையும் நியமித்து “இல்லம் தேடி கல்வியை” அறிமுகப்படுத்தி ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார்.

உயர் கல்விக்கு தனது பிறந்த நாளில் “நான் முதல்வன்” திட்டத்தை அறிமுகப்படுத்தி உயர் கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை மட்டும் அல்ல அவர்கள் படிப்பிற்கு பிறகு வேலைக்கு செல்வதற்காக பயிற்சி அளிக்க வேண்டும் என இந்தியாவிலேயே ஒரு திட்டத்தை கொண்டு வந்தவர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான். இந்த நான் முதல்வன் திட்டத்தை தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலக அரங்கிலேயே பாராட்டப் படுகின்றன.

சிங்கப்பூர் அமைச்சர் பாராட்டு!

எடுத்துக்காட்டாக சிங்கப்பூர் கல்வி அமைச்சர் அவர்கள் இந்த “நான் முதல்வன்” திட்டத்தை மிகவும் பாராட்டி கருத்து கூறியிருந்தார். அதை நீங்களும் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறீர்கள். இந்த “நான் முதல்வன்” திட்டம் அல்லாமல் மட்டும் “ஸ்கீல் டெவலப்மெண்ட் “என்ற ஒன்றை உருவாக்கி மாணவர்கள் கல்வி கற்கும் போது தொழில் பயிற்சிகளையும் மேற் கொள்ள வேண்டும் என திட்டத்தை தீட்டி உள்ளார் .

“நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெறுபவர்களை நான்கு நாட்களுக்கு முன்பு நான் அவர்களை சந்தித்து அவர்களுடைய பயிற்சிகளையும் அவர்களுக்கு அடுத்த கட்டமாக தேவைப்படும் உதவிகளையும் செய்து தருவதாக உறுதி அளித்து அவர்களுடைய வேலைவாய்ப்பினையும் இத்திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. தமிழகத்தில் உயர்கல்வியை பெரிதாக வளர்த்தெடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து தினம் தினம் பேசி மாணவர்களுக்காக பல திட்டங்களை தீட்டி வருகிறார்.

ஆளுநர் செய்தித்தாள்களை படிப்பதில்லை!

இதெல்லாம் தெரியாமல் ஆளுநர் அவர்கள் ஊட்டியில் துணை வேந்தர்களை அழைத்து அரசியல் செய்கிறார் . அவர் ஆளுநர் வேலையை பார்க்காமல் தமிழ் நாட்டில் ஆளுங்கட்சிக்கு எதிராக செயல்படும் எதிர்க்கட்சி போல் நடந்து கொள்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர் கல்வி துறை வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளும், திட்டங்களும் ஆளுநருக்கு தெரிவதில்லை அவர் சரியாக செய்தித்தாள்களையும் படிப்பதில்லை. செய்திகளையும் சரியாக பார்ப்பதில்லை. இதெல்லாம் தெரியாமல் அவர் பேசுவது மிகவும் வருந்தத்தக்கது.

நான் ஏற்கனவே அவரிடம் வேண்டுகோளை வைத்தேன் தமிழகத்தில் அரசியல் செய்யாதீர்கள் நீங்கள் நியமிக்கப்பட்ட “நாமினல் எக்ஸிக்யூட்டிவ்” தான் ஆளுநர் கூறுவது முற்றிலுமாக தவறான கருத்து தமிழ்நாடு உயர் கல்வித்துறையில் மிகுந்த வளர்ச்சியை எட்டியுள்ளது. நேற்று இரண்டு நாட்களுக்கு முன்பு கூட அரசு பிரசிடென்சி காலேஜ் இந்தியாவிலேயே மூன்றாவதாக உள்ளது.

இது போன்று வெளியிட்டுள்ள பட்டியலில் அண்ணா பல்கலைக் கழகமும் நல்ல வளர்ச்சி பெற்று உள்ளது 2021ல் ஆய்வுப் படிப்புகளில் 32வது இடத்தில் இருந்தது. அவை தற்போது 2003 ஆம் ஆண்டு 13வது இடத்தை எட்டி உள்ளது என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இன்ஜினியரிங்கில் 2021 ஆம் ஆண்டு 18 வது இடத்தில் இருந்த அண்ணா பல்கலைக்கழகம் 2023 ஆம் ஆண்டு 13வது இடத்தை எட்டிப் பிடித்துள்ளது என்பதை கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. இதேபோல் பல்கலைக்கழகங்கள் பட்டியலில் 2021 ஆம் ஆண்டு 16 இடத்தில் இருந்தது தற்போது 2023 ஆம் ஆண்டு 14 வது இடத்தை எட்டி உள்ளது. அது மட்டுமல்லாமல் ஓவர் ஆல் ரேங்கில் 25வது இடத்திலிருந்து தற்போது 18வது இடத்திற்கு வந்துள்ளது . இதுவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர் கல்விக்கு எடுத்துள்ள முயற்சி களின் வெற்றிகளை காண்பிக்கிறது. இதெல்லாம் தெரியாமல் ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பின்தங்கி உள்ளது என்பதை கூறுவது முற்றிலுமான தவறான கருத்து முன்பு இந்தியாவில் தமிழ்நாடு கல்வி வளர்ச்சி 51% இருந்தது அவை தற்போது 53 சதவீதமாக உயர்ந்துள்ளது. கல்லூரியில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்பதற்காக புது மைப்பெண் திட்ட த்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து உயர்க்கல்வியை தொடரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார்கள். இதனால் கிராமப்புற மாணவிகள் அதிக அளவில் கல்லூரியில் சேர்ந்து பயில்கிறார்கள்.

இது மட்டுமல்லாமல் ஏழு

புள்ளி ஐந்து சதவீதம் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்ததால் மேலும் அதிக அளவில் கிராமப்புற மாணவிகள் உயர் கல்வியை தொடர்கின்றனர்.

கிராமப்புற மாணவர்களுக்கு உயர்கல்வி!

உலக அளவிலேயே உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான். இக்கருத்துகளையும் பல்வேறு நாடுகளுக்கு செல்லும் போது அங்குள்ள கல்வி அமைச்சர்கள் எடுத்துக் கூறுகின்றனர். உதாரணமாக சிங்கப்பூர் கல்வி அமைச்சர் அவர்கள் இது குறித்து வெகு விமர்சையாக பாராட்டியுள்ளார். இதெல்லாம் தெரியாமல் ஆளுநர் அவர்கள் துணைவேந்தர்கள் அழைத்து கூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார். பல ஒன்றிய அமைச்சர்கள் வரும்போது ஏன் முதலமைச்சர் அவர்களே பட்டமளிப்பு விழாவிற்கு கூட சென்றிருக்கிறார்.

கல்வியில் அரசியல் நடத்த வேண்டும் என நாங்கள் விரும்பவில்லை ஆனால் அரசியலை புகுத்த வேண்டும் என ஆளுநர் விரும்புகிறார் , அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

தமிழ்நாடு கல்வித்துறையில் மிகுந்த வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகவே நான்கு நாட்களுக்கு முன்பு கூட நான் துணை வேந்தர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினேன் அக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் ஒரே மாதிரியான கல்வி முறை இருக்க வேண்டும். அனைத்து பாடங்களிலும் தரம் உயர்த்த வேண்டும். ஆங்கிலம் என்பது இன்டர்நேஷனல் மொழி அதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திருந்தே தமிழ்நாடு இரு மொழிக் கொள்கையை பின்பற்றி வருகின்றனர் .

இருமொழிக் கொள்கை!

பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றே பல உதாரணங்களை காட்டி இன்டர்நேஷனல் லாங்குவேஜ் ஆங்கிலம் இருக்கும் பொழுது இந்தி போன்ற மொழிகளை ஏன் திணிக்க வேண்டும் என கேள்வி எழுப்பினார். ஆளுநர் அவர்கள் பிறந்த மாநிலத்தில் கல்வித்தரம் எப்படி இருக்கிறது என்று நாம் அனைவரும் அறிந்ததே. அங்கு உள்ளவர்களே இன்று தமிழ்நாட்டிற்கு வந்து வேலை தேடுகிறார்கள். முதலில் தமிழ் வழியில் பயில வேண்டும் என்று கொண்டு வந்த அவர் பேரறிஞர்அண்ணா . அண்ணா அவர்கள் தமிழ் வழிக் கல்வியை கலை பாடங்களில் கொண்டுவந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவியல் பாடங்களை தமிழ் வழியில் கொண்டு வந்தார். கொண்டு வந்தது மட்டுமல்லாமல் தமிழ் வழியில் பயிலுவதற்கு 500 ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கினார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் பொறியியல் கல்லூரிகளில் சிவில் மற்றும் மெக்கானிக்கல் பாடத்திட்டங்களில் தமிழ் வழியைக் கொண்டு வந்தார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து பாடங்களையும் தமிழ் வழியில் கற்க வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் .ஆங்கிலத்தில் உள்ள புத்தகங்களை அண்ணா பல்கலைக்கழக கவுன்சிலில் முதலமைச்சர் அவர்கள் தமிழில் மொழிபெயர்ப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டு உள்ளார். இது போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் உயர்கல்வியை உயர்த்த வேண்டுமென முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இதைவிடவா ஆளுநர் முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறார்?

பா.ஜ.க.வை ஆளுநர் மூலமாக திணிக்க முடியாது!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஒன்றிய அமைச்சராக முரசொலி மாறன் அவர்கள் இருந்தபோதுதான் சென்னையில் ‘டைட்டல் பார்க் “ “சிப்காட் “ ஆகியவைகள் கொண்டுவரப்பட்டன. அதன் அடிப்படையிலேயே பலருக்கு வேலை வாய்ப்பு திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் ஆளுநர் அவர்கள் அரசியல் செய்து வருகிறார் தமிழ்நாட்டில் பிஜேபி ஏற்றுக்கொள்ள யாரும் தயாராக இல்லை ஆளுநர் மூலமாக இந்த பி.ஜே.பி.யை திணிக்கலாம் என திட்டம் தீட்டி வருகிறார்கள் அது தமிழ்நாட்டில் பலிக்காது

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி மாணவர்கள் கல்வித்தரத்தையும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும் என்பதற்காக வெளிநாடுகளுக்கு சென்று முதலீடுகளை ஈட்டி வருகிறார். அதன்மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறார் எனவே ஆளுநர் அவர்கள் தமிழ் நாட்டில் அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும். இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பேட்டி அளித்தார்.

மாநிலத்தின் பெருமைமிகு வளர்ச்சியை பிற மாநிலங்களுக்குச் சொல்லட்டும்!

ஆளுநரின் புளித்துப்போன அறிவுரைகள் தமிழ்நாட்டுக்கு தேவையில்லாதது!

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதில்!

சென்னை, ஜூன் 8-

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி உண்மைக்கு மாறாக ஆளுநர் அவர்கள் பேசியிருக்கிறார். அவரின் இத்தகைய புளித்துப்போன அறிவுரைகள் இன்றைய தமிழ்நாட்டுக்கு தேவையில்லாதது, பொருத்தமில்லாதது என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள அளிக்கையில் பதிலடி தந்துள்ளார்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

நாட்டிலேயே அதிக அளவு தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் கொண்டுள்ளது தமிழ்நாடு. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ளதும் தமிழ்நாடுதான். நிர்வாக திறன் சார்ந்த குறியீடுகளில், இந்தியாவிலேயே தமிழ் நாடு முதலிடத்தில் இருப்பதால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக முதலீடுகள் இங்கே குவிந்த வண்ணம் உள்ளன.

தொழில் சூழலில் தமிழ்நாடு மூன்றாவது இடம்!

அதேபோல அதிக அளவு தொழில் சார்ந்த பயன்பாட்டிற்குரிய நிலங்கள் கொண்ட வளமான மாநிலமாக தமிழ் நாடு உள்ளது. மின்மிகை மாநிலமாகவும் உள்ளது. நாட்டிலேயே திறன் வாய்ந்த மனித வளம் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களில், 50% பேர் தமிழ்நாட்டில் மட்டும் வேலை செய்கிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

உலக அளவில் சிறந்து விளங்கும் Fortune 500 என்று சொல்லக்கூடிய 500 நிறுவ

னங்களில், 130 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. தொழில் செய்வதற்கு ஏதுவான சூழல் இருக்கும் மாநிலங்களில் (DPIIT’s Ease of Doing Business Index) தமிழ் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

ரெனோ நிஸான், ஹுண்டாய், மிட்சுபிஷி, பௌ சென் போன்ற நிறுவனங்கள் சமீபத்தில் தமிழ் நாட்டில் அதிக முதலீடுகளை செய்துள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்றாகும். மேலும் பல பெருநிறுவனங்கள் தமிழ் நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம் கட்டிவருகிறார்கள்.

ஆளுநர் அவர்கள் தரவுகளை சரியாக புரிந்து கொண்டு அதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அரசிடம் விளக்கம் கேட்டு பிறகு பொதுவெளியில் பேச வேண்டும். பொதுவாக மாநிலங்களுக்குள் நடைபெறும் அந்நிய நேரடி முதலீடுகளை கணக்கிடும் போது அந்நிறுவனங்களின் தலைமை அலுவலகம் எங்கு இயங்குகிறதோ அந்த மாநிலத்தின் கணக்கில் சிலர் சேர்த்துவிடுகிறார்கள் ஆனால் அந்த முதலீட்டில் பெரும்பங்கு அந்நிறுவனத்தின் உற்பத்தி மையங்கள் எங்கு இருக்கின்றனவோ அங்கு தான் இறுதியில் சென்றடைகின்றன.

தமிழ்நாட்டில் அதிக அளவு உற்பத்தி மையங்கள்!

இதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு ஹுண்டாய் நிறுவனம். கொரியாவிற்கு அடுத்து அதிக அளவு உற்பத்தி மையங்களை தமிழ்நாட்டில்தான் இயக்குகிறது. ஆனால் ஹுண்டாய் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் ஹரியானாவில் உள்ள குருகிராம் என்ற இடத்தில் இருக்கிறது. கடினமான உற்பத்தி சார்ந்த சவால்கள் இருந்தபோதிலும் தமிழ்நாட்டில் தொழிற் சாலைகளுக்கு ஏதுவான சூழல் நிலவுவதால் அந்த சவால்களை நிறுவனங்களால் எளிதில் எதிர்கொள்ள முடிகிறது. மேல் மட்டத்தில் இருக்கும் மேலாண்மை அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் பெருநிறுவன செயல்பாடுகளை டெல்லிக்கு அருகிலேயே தலைமை அலுவலகங்களை அமைத்து தொழில்நிறுவனங்களின் தேவை மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை முன்னெடுக்க அங்கேயே முகாமிட்டு பணியாற்ற வேண்டிய தேவை இன்றும் நிலவுகிறது.

வளர்ந்து வரும் அனைத்து நாடுகளும் அதிக அளவு அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு முயற்சிப்பது இயல்பு. ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகத் துறை மற்றும் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோரும் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு அந்நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து பேசி வருகிறார்கள்.

முதலீடுகள் சார்ந்த கடுமையான போட்டிகளை கடந்து, வளர்ந்து வரும் மாநிலமான தமிழ்நாடு அந்நிய நேரடி முதலீடுகளை அதிகப்படியாக ஈர்க்க மும்முரமாக செயல்பட்டு, அந்நிறுவங்களுடன் நேரடித் தொடர்பில் இருப்பது அவசியம். தமிழ்நாடு இப்படி செயல்படுவதனால், அந்நிய நேரடி முதலீடுகளின் மூலம் தொழில் செய்வதற்கு ஏதுவான சூழலை கொண்ட மாநிலமாகவும், சிறந்த தொழில் சார்ந்த கொள்கைகளைக் வகுக்கும் மாநிலமாகவும் விளங்குகிறது.

முதல்வரே களத்தில் நின்று முதலீடுகளை ஈர்த்து வருகிறார்!

முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையே கடுமையான போட்டிச் சூழல் நிலவும் நிலையில் அந்த வரிசையில் முன்களப் போட்டியாளராக இருக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் பெருநிறுவனங்களின் நம்பகத்தன்மையைப் பெறவும் மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாக களத்தில் நின்று முதலீடுகளை ஈர்த்து வருகிறார்.

இதுவரையில் பல ஆண்டுகளாக தமிழ்நாடு சாதித்தவற்றை எங்களிடமே கூறி அரைத்த மாவையே அரைப்பது போலன்றி, ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டின் வெற்றியை மற்ற மாநிலங்களுக்கும் எடுத்துக்கூறி ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சிக்கும் பாடுபடுபவராக இருப்பதே சிறப்பு. அதுவே அனைவரது எதிர்பார்ப்புமாகும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டுள்ளார்.

ரூ.5 லட்சம்- பாராட்டுச் சான்றிதழ் - “சமூக சேவகர்களுக்கான கவர்னர் விருது” என்ற ஆளுநர் மாளிகை அறிவிப்பு சட்டப்படி சரிதானா?

நாட்டில் நடப்பது ஜனநாயக ஆட்சியா, ஆளுநர் ஆட்சியா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 8-

அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்று செயல்படவேண்டிய ஆளுநர் தன்னிச்சையாக நடப்பது ஆளுநர் ஆட்சி என்ற மனப்பான்மையில் தான்தோன்றித்தனமாக நடப்பதை எதிர்த்து ஜனநாயக சக்திகள் ஒன்று திரளவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக ஆர்.என்.ரவி அவர்கள் ஒன்றிய டில்லி அரசால் நியமிக்கப்பட்டவர் அவர் பதவியேற்ற நாள்முதல் இன்றுவரை அரசமைப்புச் சட்டப்படி தாம் ஏற்ற பதவிப் பிரமாணத்திற்கு எதிராகவும் ஓர் ஆர்.எஸ்.எஸ். சனாதனியாகவும் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகவே வெளிப்படுத்தி நடத்தி வருவதோடு, தமிழ்நாடு அரசின் எதிர்க்கட்சித் தலைவராகவே தம்மைப் பாவித்து, முற்றிலும் விரும்பத்தகாத வகையில், தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ‘திராவிட மாடல்’ ஆட்சியான மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட தி.மு.க. ஆட்சிக்கு எதிராக போட்டி அரசு ஒன்றினை தனது ராஜ்பவன் நடவடிக்கைகள்மூலம் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமும் நடத்தி வருகிறார்!

ஏற்கெனவே கடந்த ஆண்டு (2022) ஏப்ரலில் பேரறிவாளன் வழக்கில் இவரது நடவடிக்கைக்கு உச்சநீதிமன்றம் பகிரங்கமாகவே தனது கண்டனத்தைத் தெரிவித்து, கருத்துரையைப் பதிவு செய்தது தீர்ப்பின்மூலம்.

ஆளுநர் மாளிகையா? சனாதன மாளிகையா?

“மாநில ஆளுநர் மாநில அமைச்சரவையின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர்; தனித்த

கண்ணோட்டத்துடன் செயல்பட முடியாது” எனத் தெளிவாகக் குறிப்பிட்டது.

அதற்குப் பிறகு “ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் ஓர் அங்கம் என்பதை அரசமைப்புச் சட்டம் 163(1) கூறு தெளிவுபடுத்துகிறது; அதன்படிதான் அவர்கள் கடமையாற்ற முடியும்” என்றும் மேலும் சில வழக்குகளில் அண்மையில் இவ்வாறான பல தீர்ப்புகள் வெளிவந்துள்ளன!

ஆனால், இங்குள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி, தேவையற்ற சர்ச்சைக்குரிய கருத்துகளைப் பேசுவதோடு, ஆளுநர் மாளிகையை சனாதன சத்சங்க பிரச்சார அலுவலகம்போல ஆக்கியுள்ளார். தமிழ்நாடு அரசுக்கு விரோதமான கருத்துகளை சட்டம் ஒழுங்குப் பிரச்சினையானாலும், சிதம்பரம் தீட்சிதர்கள் நடத்தும் குழந்தை மணம்பற்றியும் (தானே குழந்தைத் திருமணம் செய்துகொண்டவன் என்று பெருமையாகப் பேசியும் உள்ளதோடு), தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் போன்று வெளிநடப்புச் செய்து (ஆளுநர் உரை நிகழ்த்துகையில் அரசமைப்புச் சட்ட மரபுகளைச் சிதைத்தும்) அப்பதவியின் மாண்பையே சீர்குலைத்தார்.

கவர்னர் ஆட்சியா நடைபெறுகிறது?

(5.6.2023) அன்று ஒரு செய்தி ராஜ்பவனிலிருந்து வந்துள்ளது!

ரூ.5 லட்சம் - பாராட்டுச் சான்றிதழ் “சமூக சேவகர்களுக்கான கவர்னர் விருது” விண்ணப்பிக்க ஜூலை 31 ஆம் தேதி கடைசி நாள்.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் பல விருதுகளை தக்கவர்களை அடையாளம் கண்டு கொடுத்து வருகிறது பல ஆண்டுகளாக.

அதற்குப் ‘போட்டி’யாகவோ அல்லது தனக்குத் தனி விளம்பரம் தேடவோ இப்படி ஒரு முயற்சியா? நாட்டில் நடப்பது கவர்னர் ஆட்சியா? புரியவில்லை!

இது அனுமதிக்கத்தக்கதா?

தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்துதானே இவருடைய ஊதியம் மற்றச் செலவுகள் வழங்கப்படுகின்றன அரசமைப்புச் சட்டப்படி!

அரசுடன் ஒத்துழையாமை இயக்கம் நடத்தும் ஆளுநர்!

நிறுவனங்களுக்கு ரூ.3 லட்சமும், தனி நபர்களுக்கு ரூ.2 லட்சமும் வழங்குவாராம் அறிவிப்பு நேற்று வந்துள்ளது!

தமிழ்நாடு அரசுக்கு எதிராக இப்படி ஒரு “போட்டி அரசு” நடத்துகிறார்!

அரசின் கொள்கை முடிவுகளுக்கு (Policy Decisions) எதிராக பகிரங்கமாகப் பேசி, சர்ச்சைகளை வளர்த்து வருவதை வாடிக்கையாக்கிக் கொள்ளுகிறார்!

சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட மசோதாக்களை சட்ட வரைவுகளை மாதக் கணக்கில் நிலுவையில் போட்டு வைத்து அரசுடன் ‘ஒத்துழையாமை’ இயக்கத்தை நடத்துகிறார்!

முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணத்தைக் கேலி செய்வதா?

தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்கி, இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கி, தமிழ்நாட்டை வளப்படுத்த வளர்ச்சியடையச் செய்ய வெளிநாட்டு முதலீட்டார்களைச் சந்தித்து அழைக்க நமது முதலமைச்சர் தனது குழுவினருடன் (ஒன்றிய அரசின் ஒப்புதலோடு) துபாய், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று முதலீடுகளைப் பெற்றுவந்துள்ள நிலையில், அதனைக் கொச்சைப்படுத்துவதுபோல, அதற்கு எதிராக (4.6.2023) அன்று உதக மண்டலத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை அழைத்துப் பேசியபோது சிறிதும் சம்பந்தம் இல்லாத வகையில்,

“வெளிநாடு செல்வதால் மட்டும் முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள்” என்று நையாண்டி செய்வது அவர் வகிக்கும் பதவிக்கு அழகா? சம்பந்தா சம்பந்தமில்லாதது இது.

நல்ல மனநிலையில் உள்ளவர்கள் இப்படி பேசுவார்களா?

தமிழ்நாட்டு மக்களின் பொறுமைக்கு மேலும் மேலும் சோதனை ஏற்படுத்துகின்றார்!

ஆளுநருக்கு எதிராக ஜனநாயக சக்திகள் ஒன்று திரளட்டும்!

வன்மையான கண்டனத்திற்குரிய ஆளுநரின் இத்தகைய அரசமைப்புச் சட்ட விரோத பேச்சுக்கும், செயலுக்கும் ஒரு கட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள் பொங்கி எழுவர் என்பது உறுதி!

இதுபற்றி தமிழ்நாட்டு அனைத்து ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைந்த பதில் நடவடிக்கையை விரைவில் அறிவிப்பது காலத்தின் கட்டாயமாகும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!

சேலம், ஜூன் 8-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி அறிக்கை வருமாறு:-

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு கூட்டம் இன்று (08.06.2023 - வியாழக் கிழமை) காலை 10.30 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம், “சேலம் கலைஞர் மாளிகை”, “வீரபாண்டியார் அரங்கில்”, மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மையினர் நல

உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1) கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மேற்கு மாவட்டம், மேட்டூர் வருகை குறித்து.

2) கழக ஆக்கப்பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அமைச்சர் கே.என்.நேரு - அமைச்சர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி. பங்கேற்பு!

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகம் - தளபதி அரங்கம் திறப்பு!

மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் வேண்டுகோள்!

நாமக்கல், ஜூன் 8-

நாமக்கல் மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா குறித்து நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (08.06.2023 வியாழன்) காலை 9மணி அளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கம், திருச்செங்கோடு

வேலூர் சாலையில் உள்ள மலைக் காவலர் கோவில் எதிரே நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கழக முதன்மை செயலாளர் கே.என் நேரு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என் ராஜேஷ்குமார் ஆகியோரால் திறக்கப்பட உள்ளது.

அதைத்தொடர்ந்து 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கி ஆயத்த பணிகளை மேற்கொள்ள செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் தலைமையில் மாவட்ட கழக அலுவலகம் தளபதிய